கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:28.10.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மாணவர் நல மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கல்லூரிகளுக்கிடையே நடைபெறுகின்றன. மண்டலம் (அ) 27.10.2023ல் முதல் 31.10..2023 வரை நடைபெற இருக்கிறது. முதற்கட்டமாக 10 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் 770 பேர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வருகை புரிந்திருக்கின்றனர். 10 வகையான உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டுகள் 5 நாட்கள் நடைபெற இருக்கின்றன.

மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர் நா.மரகதம், வரவேற்புரையாற்றி துவக்கி வைத்தார். பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் பொறுப்பு மற்றும் உடற் கல்வித் துறை மூத்தபேராசிரியர் முனைவர் க.முருகவேல், அவர்கள் தேசீய மற்றும் பல்கலைக்கழக கொடிகளை ஏற்றியும் ஒலிம்பிக் விளக்கை ஏற்றியும் விழாவை துவக்கி சிறப்பு விருந்தினர் உரை ஆற்றினார்.

மேலும் இன்றைய சூழலில் மாணவர்களின் மன நலம் பேண விளையாட்டுத்துறை மிக முக்கிய பணி ஆற்றுகிறது. மாணவர்கள் அதை மாபெரும் சக்தியாகக் கருதி, வாழ்க்கைக் கல்வி செம்மைப்பட அதில் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். தொடர்ந்து ஒவ்வொரு கல்லூரி விளையாட்டுச் செயலரின் தலைமையில் விளையாட்டு வீரர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன் தமது தலைமையுரையில் இவ்விதமான விளையாட்டு போட்டிகள் இன்றைய மாணவர்களின் அதீதமான மன அழுத்தம் மற்றும் கல்விப் பழுவிற்கு இடையில், ஓர் சிறந்த நிவாரணியாக விளங்குகின்றது என்றும், விளையாட்டில் ஈடுபடும் போது அது முழுமையான, உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் மற்றும் ஒட்டுமொத்த ஆற்றல் மேம்பட வழிவகுத்துள்ளது என்றும் பேசினார். இறுதியாக விளையாட்டுத்துறை துணை இயக்குனர் முனைவர் ஜே.பி. தேசிக ஸ்ரீநிவாசன் நன்றியுரை வழங்கினார்.

தொடர்ந்து முதல் மண்டலமான 10 கல்லூரிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமானது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**